*6*

# இருதயத்தில் "வசந்தகால சுத்தம் செய்தல்"

## (மத்தேயு 5:8)

*நாம் ஆறாவது பாக்கியத்திற்கு வந்திருக்கிறோம்: "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" (மத்தேயு 5:8). இந்த பாக்கியம், "பரிசுத்த வேதவசனங்களின் வட்டாரம் எங்கிலும் காணப்பட்டிருக்கும் மாபெரும் கூற்றுக்களில் ஒன்று" என்று அழைக்கப்பட்டுள்ளது.[1] இது வேதவசனங்களில் மிகவும் அறைகூவல் விடுக்கும் கூற்றுக்களில் ஒன்று என்பது நிச்சயம். இந்தப் பாடங்களை நான் தயாரிக்கையில், ஒவ்வொரு பாக்கியமும், நான் இருக்க வேண்டிய வகையில் எவ்வளவாகக் குறைவுபடுகிறேன் என்று என்னை அறியச் செய்தன. இருப்பினும் இவற்றில் எதுவும் இந்த பாக்கியத்தின் அளவுக்கு அதைச் சுட்டிக்காண்பிக்கவில்லை: "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ..." எனது மிகக் கசப்பான யுத்தங்கள் என் இருதயத்தில் போராடப்பட்டன. இந்தப் பாக்கியத்தை நாம் படிக்கையில், ஒரு வேளை இது நீங்களும் மனம் வருந்தி மண்டியிட்டு விழக் காரணமாகலாம்.*

## *"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ..."*

### *"இருதயம்" எவ்வளவு முக்கியமானதாக உள்ளது?*

மத்தேயு 5:8ல் நாம் கிறிஸ்தவத்தின் சாராம்சத்தைக் காண்பதாகக் கூறப்பட்டுள்ளது, ஏனெனில் கிறிஸ்தவம் என்பது முதன்மையாக மற்றும் முக்கியமாக இருதயத்தின் மார்க்கமாக உள்ளது. நாம் தேவனை நமது முழு இருதயத்தோடு அன்புகூர வேண்டும் (மத்தேயு 22:37), நாம் மனப்பூர்வமாக மன்னிக்க வேண்டும் (18:35) மற்றும் வசனத்தை நாம் "உண்மையும் நன்மையுமான இருதயத்திலே" ஏற்றுக்கொள்ள வேண்டும் (லூக்கா 8:15) என்று இயேசு கூறினார். பவுல், முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது "உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் *மனப்பூர்வமாய்க்* கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று எழுதினார் (ரோமர் 6:17; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "இருதயத்தில் இருந்து வருகிற"/"மனப்பூர்வமான வகையில் உள்ள" மார்க்கத்தின் முக்கியத்துவம் அதிகமாக வலியுறுத்தப்பட இயலாது. சாமுவேலிடத்தில் தேவன், "மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" என்று கூறினார் (1 சாமுவேல் 16:7;

காண்க நீதிமொழிகள் 21:2). சாலொமோன் "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்" என்று எழுதினார் (நீதிமொழிகள் 4:23).

இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாயிருத்தல் பற்றி இயேசு பேசியபோது, அவர் உண்மையான மார்க்கத்தையும் யூதத்துவத்தில் மார்க்கம் என்று நடைமுறைப்படுத்தப் பட்டுக்கொண்டு இருந்ததையும் நேரெதிராக ஒப்பிட்டார் என்று பல எழுத்தாளர்கள் நம்புகின்றனர். பரிசேயர்கள் புறம்பான சடங்குகளையும் சடங்காச்சாரத் தூய்மையையும் வலியுறுத்திய அதே வேளையில் இருதயத்தைப் புறக்கணித்திருந்தனர். இவர்களுக்கு இயேசு, "மாயக்காரரே, உங்களைக்குறித்து: இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது … என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான்" என்று கூறினார் (மத்தேயு 15:7-9; காண்க ஏசாயா 29:13). மீண்டுமாகக் கர்த்தர் பின்வருமாறு கூறினார்:

> மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, போஜனபானபாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது …
>
> மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள் (மத்தேயு 23:25-28).

இருப்பினும் நாம், பரிசேயர்கள் மாத்திரமே புறம்பான தோற்றத்திற்குக் கவனம் கொடுத்த அதே வேளையில் இருதயத்தைப் புறக்கணித்த குற்றம் செய்தனர் என்று நினைத்துவிடக்கூடாது. கிறிஸ்துவின் சரீரத்தில் உறுப்புக்கள் என்ற வகையில் நாமும்கூட, மார்க்கத்தின் புறம்பான வெளிப்பாடுகளை வலியுறுத்தும் அதே வேளையில் இருதயத்தைப் புறக்கணிக்கும் குற்றம் செய்தவர்களாக இருக்கக் கூடும். புறம்பான வெளிப்பாடுகள் மிகவும் முக்கியமானவையாக இருக்கும் அதே வேளையில், அவைகள் "இருதயத்தில் இருந்து" வரவில்லை என்றால் அவைகள் ஒன்றுமில்லை என்றே எண்ணப்படும்.

### "இருதயம் என்றால் என்ன?

சுத்தமுள்ளவர்களாக இருப்பதற்கு உண்மையிலேயே தேவைப்படுவது என்ன என்பதை நிலைநாட்ட நாம் சற்று நேரத்தை எடுத்துக்கொள்வது ஒருவேளை அவசியமாக இருக்கலாம். "இருதயம்" என்றால் என்ன? மத்தேயு 5:8ல் "இருதயம்" என்ற வார்த்தை, நாம் "cardiac" என்ற வார்த்தையைப் பெறுகிற *kardia* என்ற வார்த்தையில் இருந்து வருகிறது, இது "இருதயத்தின் அல்லது இருதயத்திற்கு அருகில்" என்று அர்த்தப்படுகிறது.[2] உடல்ரீதியான இருதயம்

என்பது உடல்ரீதியான வாழ்வின் முதன்மை உறுப்பாக உள்ளது (காண்க லேவியராகமம் 17:11). "ஒரு சுலபமான மாறுதலின் மூலம் இவ்வார்த்தை மனிதனின் முற்றான மனரீதியான மற்றும் ஒழுக்கரீதியான நடவடிக்கையாக, அதாவது பகுத்தறிகிற மற்றும் உணர்வுப்பூர்வமான என்ற இரு கூறுகளாக நிலைநிற்க வந்தது."[3]

இருதயம் என்பது, உணர்வின் மையம் என்றே பொதுவாக நாம் நினைக்கிறோம், அது அவ்வாறே உள்ளது. நாம் நமது இருதயங்களில் தேவன்மீது அன்புகூருகிறோம் (லூக்கா 10:27), மற்றும் நாம் "சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூர" வேண்டியவர்களாக இருக்கிறோம் (1 பேதுரு 1:22). இருப்பினும் "இருதயம்" என்பதன் வேதாகமப் பயன்பாடு, உணர்வுகள் என்பதோடு இன்னும் அதிகமானவற்றை உள்ளடக்குகிறது. சிலவேளைகளில் இந்தச் சொற்றொடர், புத்திக்கூர்மையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. தங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் *சிந்தித்தவர்களைப்* பற்றி இயேசு பேசினார் (மத்தேயு 9:4). மீண்டுமாக "இருதயம்" என்ற வார்த்தை, மனதின் முடிவு - செய்யும் பகுதியான மனவிருப்பம் என்பதுடன் இணைவு கொண்டுள்ள வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எபிரெயர் 4:12 "இருதயத்தின் நினைவுகளையும் *யோசனைகளையும்*" பற்றிக் குறிப்பிடுகிறது (என்னால் வலியுறுத்தப்படுகிறது). வேதாகமத்தில் "இருதயம்" என்பது மனிதனின் உணர்ச்சிகள், அவனுடைய சிந்தனைகள், மற்றும் அவனுடைய தூண்டுதல்கள் ஆகியவற்றின் இருப்பிடமாக உள்ளது. நமது வேதபாடப்பகுதியில், "இருதயம்" என்ற வார்த்தை ஒரு தனிநபருக்குள்ளாக இருக்கிற *யாவற்றையும்* குறிக்கிறது. அது ஒரு நபரின் மையமாக - அவரது இருப்பு மற்றும் ஆளுமைத்துவத்தின் மையமாக உள்ளது.

### "தூய்மையாக" இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது?

நாம் நமது இருப்பின் மையத்தில் *தூய்மையாக* இருக்க வேண்டும் என்று இயேசு கூறினார். "தூய்மை" என்பது katharos என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. Katharos என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் இருபத்தி ஏழு முறைகள் காணப்படுகிறது[4] மற்றும் இது பொதுவாக "தூய்மை" அல்லது "சுத்தம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[5] இவ்வார்த்தை, உடல்ரீதியான அல்லது சடங்காச்சாரமான சுத்தம் பற்றிக் குறிப்பிடப் பயன்படுத்தப்படக்கூடும் (காண்க மத்தேயு 23:25), ஆனால் இயேசு, உள்ளான சுத்தத்தைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார். Katharos என்பது ஒன்றின்மீது ஒன்று கவிந்ததான குறைந்த பட்சம் மூன்று கருத்துக்களை உள்ளடக்குகிறது, அவற்றில் இரண்டு ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளன.[6]

(1) "சுத்தம்." Katharos என்ற வார்த்தை, அழுக்காயிருந்து சுத்தமாகத் துவைக்கப்பட்ட உடைக்குப் பயன்படுத்தப்பட்டது. தூய்மையான இருதயம் என்பது சுத்தமான இருதயமாக உள்ளது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" என்று கூறினார் (எபிரெயர் 12:14).

(2) "தூய்மை." Katharos என்ற வார்த்தை, உமி பறக்கடிக்கப்படும்படி தூற்றபட்ட தானியத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. தூய்மையான இருதயங்கள்

அசுத்தம் நீக்கப்பட்டவையாக உள்ளன. தாவீது, "... சுத்திகரியும், அப்போது நான் சுத்தமாவேன்"; என்று ஜெபித்தார் (சங்கீதம் 51:7அ). *Katharos* என்பது சுத்தம் மற்றும் தூய்மை என்ற இரு கருத்துக்களையும் உள்ளடக்குகிறது. ஆனால் இன்னும் ஒரு காரணி இருக்கிறது.

(3) ''ஒருமையாயிருக்கும் தன்மை.'' தூய்மையான பால் என்பதே முழுப்பாலாக உள்ளது; அதில் தண்ணீர் எதுவும் சேர்க்கப்பட்டு இருப்பதில்லை. தூய்மையான தங்கமே முழுத்தங்கமாக உள்ளது; அதில் உள்ள வேறு எந்தத் தாழ்ந்த உலோகமும் அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. தூய்மையான இருதயம் என்பது கலப்படமான நோக்கங்களினால் நிரப்பப்பட்டு இருப்பதில்லை. கலப்படமான நோக்கங்கள் கொண்டுள்ளவர்களை விவரிக்க வேதாகமத்தில் ''இருமனதாய்'' மற்றும் ''இருமனமுள்ளவர்கள்'' என்ற சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சங்கீதம் "இருமனதாக" இருப்பவர்களைப் பற்றிப் பேசுகிறது (சங்கீதம் 12:2). யாக்கோபு "இருமனமுள்ளவர்" பற்றி எழுதினார் (யாக்கோபு 4:8). தாவீது, "நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை *ஒருமுகப்படுத்தும்*" என்று ஜெபித்தார் (சங்கீதம் 86:11இ; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

நான், இருதய பரிசோதனைகளில் ''சுத்தம்'' மற்றும் ''தூய்மை'' ஆகியவற்றில் உயர்ந்த மதிப்பெண் பெறவில்லை. அசுத்தமான சிந்தனைகளில் இருந்து இருதயத்தைக் காத்துக்கொள்ளுதல் என்பது கடினமானதாக உள்ளது. இருப்பினும், ''ஒருமைத்தன்மை'' பரிசோதனையில்தான் நான் உண்மையில் தோல்வியடைகிறேன், ஏனெனில் இது நமது முன்னுரிமைகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பானவையாக உள்ளது. வில்லியம் பார்க்களே என்பவர், "ஒருவர் தமது சொந்த நோக்கங்களைப் பரிசீலனை செய்தல் என்பது அச்சுறுத்தும் மற்றும் வெட்கத்திற்குரிய விஷயமாக உள்ளது, ஏனெனில் நம்மில் மிகச்சிறந்தவர்கள் கூட முற்றிலும் கலப்படமற்ற நோக்கங்களுடன் செய்யக்கூடிய ஒருசில விஷயங்கள் இந்த உலகத்தில் உள்ளன'' என்று எழுதினார்.[7] நீங்கள் கலப்படமற்ற நோக்கங்கள் பற்றி உங்களைப் பரிசோதிக்க விரும்புகிறீர்களா? அப்படியென்றால், பின்வருவன போன்ற கேள்விகளை நீங்கள் உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள். "கர்த்தருக்காக ஊழியம் செய்கிறபோது நான் அங்கீகரிக்கப் படாதிருந்தால் என்னவாகும்?"; "நான் பெறத்தகுதியான மதிப்பை மற்றவர்கள் பெற்றால் என்னவாகும்?"; "சரியானதைச் செய்ய முயற்சி செய்தலுக்காக நான் விமர்சிக்கப்பட்டால் என்னவாகும்?" இப்படிப்பட்ட நிகழ்வுகள் நமக்கு நடைபெறும்போது, நாம் வெளியேறிவிடும் படி சோதிக்கப்படுகிறோமா?

நம்மில் பெரும்பான்மையானவர்கள், நமது இருதயங்கள் இருக்க வேண்டிய அளவுக்குத் தூய்மையாக இருப்பதில்லை என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். நாம் எவ்வாறு தூய்மையான இருதயங்களைக் கொண்டிருக்க முடியும்? ஒருவேளை நமக்கு "ஒரு நல்ல வசந்தகால சுத்தம் செய்தல்" என்று அழைக்கப்படும் விஷயம் தேவையாக இருக்கலாம். குளிர்காலத்தின் முடிவில், வசந்தகாலம் கடைசியாக வந்து சேரும்போது, ஜன்னல்கள் விரியத் திறந்து வைக்கப்பட்டன. தரைவிரிப்புக்கள் அடித்துச் சுத்தம் செய்யப்படுவதற்காக வெளியே எடுத்துச் செல்லப்பட்டன. படுக்கையானது வெளியே காற்றாட எடுத்துச் செல்லப்பட்டது. வீடானது மேலிருந்து கீழ்வரை சுத்தம்

செய்யப்பட்டது. நமது இருதயங்களுக்கு அந்த வகையான முழு சுத்தம் செய்தல் தேவைப்படலாம்.

தேவைக்கு மிகுதியாகக் கூறுதல் என்ற இடர்ப்பாட்டில் நான், முந்திய பாக்கியங்களில் காணப்படும் பண்புகளை மேம்படுத்துதலே தொடக்க இடமாக உள்ளது என்று மீண்டும் குறிப்பிட என்னை அனுமதியுங்கள். நாம் நமது ஆவிக்குரிய தேவைகளை உணர்ந்து அறிந்துகொண்டால் (முதல் பாக்கியம்), ஆவிக்குரிய வகையில் நமது கைவிடப்பட்ட நிலையைக் குறித்துக் துயரப்பட்டால் (இரண்டாவது), சாந்தமும் கீழ்ப்படிதலுமுள்ள ஆவியை மேம்படுத்திக் கொண்டால் (மூன்றாவது), மற்றும் தேவனுடைய நீதியின்மீது பசியாக இருந்தால் (நான்காவது), இது நம்மை இரக்கம் நிறைந்தவர்களாகவும் (ஐந்தாவது), இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாகவும் (ஆறாவது) ஆக்குமளவுக்குச் செல்லும். இத்துடன் கூடுதலாக, நான் ஒருசில ஆலோசனைகளைக் கூற அனுமதியுங்கள். மற்ற எல்லாப் பாக்கியங்களிலும் உள்ளதைப் போலவே, நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளும் தேவன் மாத்திரம் செய்யக்கூடிய விஷயமும் இதிலும் உள்ளன.

*நாம்* என்ன செய்ய முடியும் என்பதைக் கொண்டு தொடங்க என்னை அனுமதியுங்கள். ஏற்கனவே குறிப்பிட்டபடி, சாலொமோன் "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்திலிருந்து ஜீவஊற்று புறப்படும்" என்று எழுதினார் (நீதிமொழிகள் 4:23). யாக்கோபு தமது வாசகர்களுக்கு, "உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்" என்று கட்டளையிட்டார் (யாக்கோபு 4:8). இவ்விரு எழுத்தாளர்களுமே, கிறிஸ்தவர்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட இருதயங்களைக் கொண்டிருப்பதற்குத் *தங்களால்* முடிந்தவற்றைச் செய்யும்படி அறைகூவல் விடுத்தனர். *நீங்களும் நானும்* நமது இருதயங்களைப் பரிசுத்தமாக்குவதற்கு என்ன செய்ய முடியும்? முதலாவது, நமது தேவையை ஒப்புக்கொண்டு நமது இருதயங்களைச் சுத்தமாகக் காத்துக்கொள்ள நாம் மிகச்சிறந்த வகையில் செயல்பட வேண்டும்.

அடுத்தபடியாக, நாம் தேவனுடைய வசனத்தினால் நமது மனங்களை நிரப்ப வேண்டும். சங்கீதக்காரர், "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே" என்று எழுதினார் (சங்கீதம் 119:9). இயேசு தமது சீஷர்களிடத்தில், "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்" என்று கூறினார் (யோவான் 15:3). நாம் வசனத்தை வாசித்தல், வசனத்தைப் படித்தல், வசனத்தைத் தியானித்தல் மற்றும் வசனத்திற்குக் கீழ்ப்படிதல் ஆகியவை அவசியமாக உள்ளது. பேதுரு தமது வாசகர்களிடத்தில், "கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால்" என்று கூறினார் (1 பேதுரு 1:22அ).

நமது இருதயங்களை வசனத்தினால் நிறைத்தலுடன் கூடுதலாக நாம் நமது மனங்களைப் பொதுவாக நல்ல சிந்தனைகளினால் நிரப்புவதும் அவசியமாக உள்ளது. நாம் எதைப் பார்க்கிறோம் மற்றும் எதைக் கேட்கிறோம் என்பதைப் பற்றி நாம் கவனம் எடுத்துக்கொள்வது அவசியமாகிறது.[8] பவுல், "… கற்புள்ளவைகளெவைகளோ, … அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்" என்று எழுதினார் (பிலிப்பியர் 4:8). எவரொருவரும் அசுத்தமான சிந்தனைகள் தங்கள் மனதில் நுழைவதைத் தடுக்க இயலாது, ஆனால் அவற்றிலேயே அவர்

நிலைத்திருக்கத் தேவையில்லை. "உங்கள் தலைக்குமேல் ஒரு பறவை பறப்பதை உங்களால் தடுக்க இயலாது, ஆனால் அது உங்கள் தலைமுடியில் ஒரு கூடு கட்டுவதை உங்களால் தடுக்க முடியும்" என்று கூறப்பட்டுள்ளது.

இவையாவும் உதவும், ஆனால் நம்மால் முடிந்த அளவு மிகவும் சிறப்பாகச் செய்தபின்பும்கூட, நமது இருதயம் இருக்க வேண்டிய பிரகாரம் இருப்பதில்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டியவர்களாக இருக்கிறோம். எரேமியா தீர்க்கதரிசி, "எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது" என்று எழுதினார் (எரேமியா 17:9அ). முடிவில் நாம் நம்மைத் தேவனுடைய இரக்கத்தின்கீழ் வைத்து, "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்" என்று ஜெபிக்க வேண்டும் (சங்கீதம் 51:10அ). இஸ்ரவேல் மக்கள் அடிமைத்தனத்தில் இருந்தபோது, அவர்களை ஊக்குவிக்க முயற்சி செய்த எசேக்கியேல், தேவன் அளித்த பின்வரும் வாக்குத்தத்தத்தைப் பகிர்ந்துகொண்டார்: "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு ..." (எசேக்கியல் 36:26அ). நாம் இயேசுவில் நம்பிக்கை வைக்க வரும்போது மற்றும் கிருபைக்கான நமது தேவையை ஒப்புக்கொள்ளும்போது, விசுவாசத்தினால் தேவன் நமது இருதயங்களைச் சுத்திகரிக்கிறார் (காண்க நடபடிகள் 15:9).

## "... அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்."

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் [மகிழ்ச்சியானவர்கள்] ..." இருதயத்தில் சுத்தம் என்பது மகிழ்ச்சிக்கு என்ன செய்வதாக இருக்கிறது? நமது இருதயங்கள் பொறாமை மற்றும் பகைமை ஆகியவற்றை நீக்கியிருந்தன என்றால், நமது இருதயங்கள் மனநிறைவு உடையவையாக இருக்கும். நமது இருதயங்கள் வெறுப்புணர்வை நீக்கியிருந்தன என்றால், நாம் எந்த மனிதரையும் நமது விரோதியாக எண்ண மாட்டோம். ஜேம்ஸ் ஹேஸ்டிங்ஸ் என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> [இருதயத்தில் சுத்தம் என்பது] நம்மை வேதனையின் ஆயிரம் ஆதாரமூலங்கள், இருதயத்தின் உள்ளான கலகம் ... , மனச்சாட்சியின் கண்டனம்பண்ணும் குரல், உலகப்பிரகாரமான பெரும் ஏக்கம் நிறைந்த கவலை மற்றும் சலிப்பு, கசப்புணர்வு ... கோபம், விரோதம் [மற்றும்] ... மனநிறைவு இல்லாமை ஆகியவற்றில் இருந்து விடுவிக்கிறது.[9]

குறிப்பாக நமது தற்போதய வேதவசனப் பகுதியில், இருதயத்தில் சுத்தமுள்ளவர்களின் ஆசீர்வதிக்கப்பட்ட தன்மை, "அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" என்ற வாக்குத்தத்தத்துடன் நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ளது. இதைக் காட்டிலும் அதிக மன எழுச்சி தரும் வாக்குத்தத்தம் வேறு எதுவும் இருக்க முடியாது. பழங்கால சமூகங்களின் பழக்கவழக்கங்களின்படி, ஒரு அரசரின் சமூகத்தில் வந்து அவரது முகத்தைக் காணுதல் என்பது கீர்த்திகளிலேயே மிக உயர்வான கீர்த்தியாக இருந்தது.[10] வேதாகமத்தின்படி, இருதயத்தில் சுத்தமுள்ளவர்களே தேவனுடைய சமூகத்திற்குள் வரத் தகுதியானவர்களாக உள்ளனர். தாவீது, "யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில்

*மாசில்லாதவனுமாயிருந்து ..." என்று எழுதினார் (சங்கீதம் 24:3, 4).*

*உடல்ரீதியாகக் காணும் திறனைப் பொறுத்த மட்டில், எல்லாரும் ஒரேவிதமான திறனைக் கொண்டிருப்பதில்லை. எனது சகோதரர் காய், அவரது பார்வையைப் பாதித்த குளுகோமா[11] என்ற நோயின் மிக அரிதான வகையைக் கொண்டுள்ளார். அவரால் காண முடியாதவை அதிகம் உள்ளன. அது கவலைக்குரியது, ஆனால் அது, அசுத்தமான இருதயங்களைக் கொண்டிருத்தலின் விளைவாக ஆவிக்குரிய பார்க்கும் திறன் பாதிக்கப்பட்டவர்களின் நிலையைப் போன்று அவ்வளவு பரிதாபமானது அல்ல. இருதயத்தில் சுத்தமுள்ளவர்களே தேவனைக் காண்பார்கள்.*

## இந்த வாழ்வில் தேவனைத் தரிசித்தல்

*மீண்டுமாக நான், இவ்வாக்குத்தத்தம் இங்கும் இனிவரும் வாழ்விலும் நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டுள்ளது என்று கருத்துக் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள். இங்கு - மற்றும் - இப்போது தேவனைத் தரிசித்தல் பற்றி, நாம் நமது உடல்ரீதியான கண்களால் அவரைத் தரிசிக்க இயலாது என்பதைப் புரிந்துகொள்ளுகிறோம். அவர் ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24) மற்றும் "அதரிசனமானவராக" இருக்கிறார் (கொலோசெயர் 1:15). மோசேக்கு அவர், "நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக்கூடாது" என்று கூறினார் (யாத்திராகமம் 33:20). யோவான் "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை" என்று கூறினார் (யோவான் 1:18அ).*

*இருப்பினும் நாம், விசுவாசக் கண்களைக் கொண்டு தேவனைக்காண/தரிசிக்க முடியும். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரின் கூற்றுப்படி, "விசுவாசமானது ... காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபிரெயர் 11:1). அதே எழுத்தாளர், மோசே விசுவாசத்தினால் "அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்தார்" என்று குறிப்பிட்டார் (வசனம் 27). பவுல், "மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, ... காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" என்று கூறினார் (2 கொரிந்தியர் 4:17, 18).*

- *விசுவாசத்தினால் நாம், இயற்கையில் தேவனைக் காணுகிறோம் (காண்க சங்கீதம் 19:1).*
- *விசுவாசத்தினால் நாம், வரலாற்றில் தேவன் தமது திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதைக் காணுகிறோம்.*
- *விசுவாசத்தினால் நாம், தேவன் நம்மீது பொழிந்துள்ள ஆசீர்வாதங்களில் அவரைக் காணுகிறோம். ஒரு எளிய உணவை அளிப்பதில், நமது வாழ்வை ஆசீர்வதிக்கும்படி நமக்குக் குடும்பங்களை அளிப்பதில், மற்றும் புதிதாகப் பிறந்த ஒரு குழந்தையின் முகத்தில் நாம் அவரைக் காணுகிறோம் (காண்க யாக்கோபு 1:17அ).*
- *விசுவாசத்தினால் நாம், தேவனுடைய மக்களின் வாழ்வில் அவரைக் காணுகிறோம்.*
- *விசுவாசத்தினால் நாம், நமது சொந்த வாழ்வில் இடர்ப்பாடுகள் நம்மை மூழ்கடிப்பதாக அச்சுறுத்துகிறபோதும்கூட, அவர் செயல்படுதலில்*

அவரைக் காணுகிறோம் (காண்க ரோமர் 8:28).

- எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் இயேசுவுக்கு மிக நெருக்கமாக வருகையில், அவரை இன்னும் சிறப்பாக அறிந்துகொள்ள வருகையில், நாம் விசுவாசத்தினால் தேவனைக் காணுகிறோம்.

நம்மில் பெரும்பான்மையானவர்கள், நாம் எவற்றைக் காணத்தயாராக இருக்கிறோமோ, அவற்றைக் காணுகிறோம். எனது மகள் டெபீ, ஒரு பழைய, புறக்கணிக்கப்பட்ட வீட்டைக் காணுகிறாள், அவள் அந்த வீட்டிற்கு உள்ள திறன்வலிவைக் காணுகிறாள் - அது மீளக்கட்டுவிக்கப் பட்டபின்பு, எவ்வாறு இருக்கமுடியும் என்பதை அவள் காண்கிறாள். நான் ஒரு பழைய வீட்டைக் காணும்போது ... , நான் அதை ஒரு பழைய வீடாக மாத்திரமே காணுகிறேன். என்னால் காண முடியாத சிலவற்றை டெபீ காணுகிறாள்.[12] அதுபோலவே, இந்த வாழ்வில் இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள், சுத்தமற்றவர்களால் காண இயலாத சிலவற்றைக் காணுகின்றனர். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் மாத்திரமே தேவனைத் தரிசிக்கத் தயாராக உள்ளனர்.

**இனிவரும் வாழ்வில் தேவனை தரிசித்தல்**

ஒரு கருத்தில், இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் இந்த வாழ்வில் தேவனைத் தரிசிக்கின்றனர், ஆனால் இந்த வாழ்விற்குப் பின்புதான் மத்தேயு 5:8ல் உள்ள வாக்குத்தத்தம் முழுமையான நிறைவைக் காணுகிறது. யோவான், "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே *நாம் அவரைத் தரிசிப்பதினால்*, அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" என்று எழுதினார் (1 யோவான் 3:2; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பரலோகத்தில் நாம், இராஜாவின் பிரசன்னத்திற்குள் இட்டுச்செல்லப்பட்டு, அவரது முகத்தைத் தரிசிப்போம். அந்தப் பரலோக இராஜ்யத்தில், "இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, *அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள்*" (வெளிப்படுத்தின விசேஷம் 22:3, 4அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

என்ன ஒரு ஆச்சரியமான வாக்குத்தத்தம்! இயேசுவின் இரத்தத்தினால் சுத்தமாக்கப்பட்ட இருதயத்தைக் கொண்டுள்ளவர்கள் - ஆம் நாமும்கூட, நமது குறைகள் மற்றும் தவறுகளுடன் கூட - தேவனைத் தரிசிக்கும் நாள் வருகிறது! கடைசியாகப் பரதீசு மீளக்கட்டுவிக்கப்படும் (காண்க வெளிப்படுத்தின விசேஷம் 2:7), மற்றும் முதல் பரதீசில் ஆதாமும் ஏவாளும் தேவனுடன் கொண்டிருந்த ஐக்கியத்தைப் போல நாமும் கொண்டிருப்போம்!

## முடிவுரை

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ..." தீமோத்தேயுவுக்குப் பவுல், "கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே" என்று கூறினார் (1 தீமோத்தேயு 1:5). இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்

*ஏனெனில், "அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்." இந்த வாழ்வில் நாம் விசுவாசத்தின் கண்களைக் கொண்டு தேவனைத் தரிசிக்கிறோம்; ஆனால் இனிவரும் வாழ்வில் நாம் அவரை முகமுகமாய்த் தரிசிப்போம். இந்த வாழ்வில் இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள், இராஜாவுடன் பேச/அவரைக்காண, மன எழுச்சியுடன் ஒரு வெளியறையில் காத்திருக்கின்றனர்!*

*நீங்கள் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாக இருக்கிறீர்களா? இருதயத்திலும் வாழ்விலும் சுத்தமற்றவர்கள் தேவனைத் தரிசிக்க முடியாது என்பதை யோவான் தெளிவாக்கினார்: "பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை" (1 யோவான் 3:6ஆ; காண்க 3 யோவான் 11). அன்பின் கீழ்ப்படிதல் மூலமாக புதிய ஜீவனுள்ளவர்களாக நடந்துகொள்ளும்படிக்கு நீங்கள் தேவனுடைய பிள்ளையாகி இருக்கிறீர்களா (ரோமர் 6:3-6, 17, 18)? ஒருவேளை கடந்த காலத்தில் உங்கள் இருதயம் தேவனால் சுத்தமாக்கப்பட்டிருக்கலாம், ஆனால் தேவனைப் பற்றிய உங்கள் தரிசனம் மங்கலானதாக மற்றும் புகைமூட்டமானதாக ஆகியிருக்கலாம். அப்படியென்றால், நீங்கள் கர்த்தரிடமாய் மீளக்கட்டுவிக்கப் படுதலுக்கு இதுவே வேளையாக உள்ளது (காண்க கலாத்தியர் 6:1). தேவனைக் காண்பதற்கான உங்கள் தேடுதலில் நாங்கள் உங்களுக்கு உதவக்கூடுமென்றால், அதைச் செய்யத் தயவுசெய்து எங்களை அனுமதியுங்கள்.*

---

*குறிப்புகள்*

[1]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 1 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 106. [2]*The American Heritage Dictionary*, 4th ed. (2001), s.v. "cardiac." [3]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 297. [4]*இந்தக் கணக்கீடு* Accordance®, © 2003, Oak Tree Software, Inc. *என்பதன் அடிப்படையிலானது.* [5]Robert Young, *Young's Analytical Concordance to the Bible* (Peabody, Mass.: Hendrickson Publishers, n.d.), 785. [6]*பின்வரும் கலந்துரையாடலில் சிலபகுதிகள்* William Barclay, *The Gospel of Matthew*, vol. 1, The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1958), 101. *என்ற புத்தகத்தில் இருந்து தழுவப்பட்டுள்ளன.* [7]Ibid, 102. [8]*இதை நீங்கள் வாழும் சமூகத்திற்கு ஏற்றாற்போல் பயன்படுத்துங்கள். அமெரிக்காவில் ஆபாசமான புத்தகங்கள், பாங்கற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்படங்கள், மற்றும் அசுத்தமான பேச்சுப் பேசுபவர்களுடன் வேண்டுமென்றே தொடர்பு கொள்ளுதல் ஆகியவற்றைக் குறித்த நடைமுறைப் பயன்பாடு ஏற்படுத்தப்பட முடியும்.* [9]James Hastings; quoted in James M. Tolle, *The Beatitudes* (Fullerton, Calif.: Tolle Publications, 1966), 67. [10]Tolle, 64.

[11]*குளூகோமா என்பது, கண்விழிக்குள் அசாதாரணமான உயர் அழுத்தத்தினால் ஏற்படும் கண் குறைபாடு ஆகும். காய் தமது பிள்ளைப் பிராயத்தில் பட்ட காயத்தின் விளைவாக இந்நிலையை அடைந்திருக்கலாம்.* [12]*விண்மீன்களைக் கண்ணோக்குதல் என்பது இன்னொரு விவரிப்பாக இருக்கலாம். மினுக்கிடும் சிறு வெளிச்சிப் புள்ளிகளைக் கண்டு நாம் வெறுமனே பாராட்டுவதைப் பார்க்கிலும், ஒரு வானவியலாளர் அல்லது ஒரு மாலுமி வித்தியாசமான சிலவிஷயங்களைக் காணுகிறார்.*